noc

அனுப்புநர்
திரு.க.பாலதண்டாயுதபாணி, எம்.எஸ்.சி.,பி.எட்.,எம்.பில்.,
முதன்மைக் கல்வி அலுவலர்,
தேனி.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,
பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை– 6.

ந.க.எண் [illegible] /ஆ5/2020, நாள். 05.10.2020

அய்யா,

பொருள் : தமிழ்நாடு குழந்தைகள் இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதி 2011 விதி 12 உபவிதி(4) மற்றும் நடுவண் அரசு – இடைநிலைக் கல்வி வாரிய பள்ளிகள் (சி.பி.எஸ்.இ.) விதித் தொகுப்பின் கீழ் தேனி மாவட்டம் – பெரியகுளம் கல்வி மாவட்டம் – இலட்சுமிபுரம் ஸ்ரீ ரோஸி வித்யாலயா சி.பி.எஸ்.சி. பள்ளியில் Pre. K.G. முதல் 10–ஆம் வகுப்பு – 10.05.2020 முதல் 09.05.2023 வரை அங்கீகாரம் கோரும் கருத்துருக்கள் பரிந்துரை செய்து பணிந்தனுப்புதல் – சார்பு.

பார்வை :
1. அரசாணை நிலை எண் 101. பள்ளிக்கல்வி நாள் 18.05.2018.
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 070580 / ஜி1/ எஸ்2/ 2017, நாள். 26.09.2017 மற்றும் மு.மு.எண்.18883/ஜி1/எஸ்.2/2018, நாள். 27.03.2018 மற்றும் ந.க.எண்.059691/ஜி1/எஸ்2/2018 நாள். 10.09.2018.
3. பெரியகுளம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண். 2768 /அ1 / 2020, நாள்.03.10.2020.

--------

தேனி வருவாய் மாவட்டம், பெரியகுளம் கல்வி மாவட்டம், இலட்சுமிபுரம் ஸ்ரீ ரோஸி வித்யாலயா பள்ளியில் Pre.K.G முதல் 10 ஆம் வகுப்பு வரை நடத்திட தடையின்மைச் சான்று பார்வை 2–இல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணையின் படி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3– இல் காணும் பெரியகுளம் மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதத்தில், மேற்காணும் பள்ளியின் Pre.K.G. முதல் 10–ஆம் வகுப்பு வரை அங்கீகாரம் வழங்கிட கருத்துரு பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் தேனி முதன்மைக்கல்வி அலுவலரால் 05.10.2020 அன்று பள்ளி பார்வையிடப்பட்டுள்ளது.

இப்பள்ளியானது ஒட்டகாரத்தேவர் கல்வி அறக்கட்டளையின் கீழ் செயல்பட்டு வருகிறது. பள்ளி அறக்கட்டளையானது பெரியகுளம் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பள்ளி அமைவிடம் 33 வருட குத்தகை அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. குத்தகை ஆவணம் பெரியகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிக் கட்டிடங்களுக்கு வரைபட அனுமதி (DTCP) மதுரை நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குநர் அவர்களால் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளரிடமிருந்து கட்டிட உறுதிச்சான்று 10.05.2020 முதல் 09.05.2023 முடிய பெறப்பட்டுள்ளது. பெரியகுளம் வட்டாட்சியரிடமிருந்து கட்டிட உரிமச் சான்று 10.05.2020 முதல் 09.05.2023 முடிய பெறப்பட்டுள்ளது. சுகாதாரச் சான்று இணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் தேனி அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. பெரியகுளம் தீயணைப்பு அலுவலரிடமிருந்து தடையின்மைச் சான்று பெறப்பட்டுள்ளது.

அரசுக் கணக்கில் ரூ.1,000/– செலுத்தப்பட்டமைக்கான அசல் சலான் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையிலும், பெரியகுளம் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் தேனி முதன்மைக் கல்வி அலுவலர் பள்ளியினை கள ஆய்வு செய்து பெறப்பட்ட பார்வை அறிக்கையின்படியும், தமிழ்நாடு குழந்தைகள் இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதி 2011 விதி 12 உபவிதி(4) மற்றும் நடுவண் அரசு இடைநிலைக் கல்வி வாரிய பள்ளிகள் (சி.பி.எஸ்.இ.) விதித் தொகுப்பின் கீழ், தேனி மாவட்டம், பெரியகுளம் கல்வி மாவட்டம், இலட்சுமிபுரம், ஸ்ரீ ரோஸி வித்யாலயா பள்ளிக்கு Pre. K.G. முதல் 10–ஆம் வகுப்பு வரை 10.05.2020 முதல் 09.05.2023 முடிய அங்கீகாரம் கோரும் கருத்துருவினை பரிந்துரை செய்து இத்துடன் இணைத்து பணிந்தனுப்புகின்றேன்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
தேனி.

இணைப்பு – பார்வை அறிக்கை மற்றும் கருத்துரு

நகல்
தாளாளர்,
ஸ்ரீ ரோஸி வித்யாலயா சி.பி.எஸ்.இ. பள்ளி,
இலட்சுமிபுரம்.
தேனி மாவட்டம்.

23/6/2023

PRINCIPAL
SHRI ROSY VIDYAALAYA
Periyakulam Main Road,
Lakshmipuram-625 523.
Periyakulam (Tk), Theni (Dt)